**சரணம் 1 :** (சத்தாய்) என்றுமுளதான (நிஷ்களமாய்) உருவமில்லா (அல்லது) எங்குமுள்ள, ஒரு சாமியமும் முன் (இல்லதாய்) ஒப்புமை ஏது இல்லாத இறைவன். (சித்தாய்) அறிவாய் (ஆனந்தமாய்) அழியாத அறிவின்பம் தருபவராகிய திருத்துவ தெய்வமே எனப் போற்றி, நாயினும் கீழான என் பாவம் நீக்கி மீட்க உம்மையன்றி யாரால் முடியிமெனத் துணைக்கு அழைக்கிறார். சத்து சிந்து ஆனந்தம் ஆகிய முக்கிய குணங்களை உடைய இறைவன் என்பதற்கு பேராயர் கோ.செல்வமணி பின்வரும் கிறிஸ்தியல் விளக்கம் தருகிறார். கிறிஸ்தவ நம்பிக்கையும் விளக்கங்களும் பக்கம் (243-244) சத்து:(யாத் 3:14) இறைவனின் இருக்கும் தன்மை (இருக்கிறவராகவே இருக்கிறேன்) என்ற, (சித்து), அறிவு (கடவுளின் வார்த்தை) திருமறை குறிப்பையும் வார்த்தையில் உலக படைத்தார். (ஆதி 1:1) ஆதியிலே வார்த்தை இருந்தது அது மாம்சமாகிறது (யோவான் 1:14) (ஆனந்தம்) ஆவியின் கனி 9-ல் ஒன்று. சந்தோஷம்.

**சரணம் 2 :** (எம்மா விக்குருதி) என் ஆத்துமா அழிவுக்கேதுவாயிருப்பதை எண்ணி உருகி உயிர் தந்து என்னைக் காப்பாற்றுவதற்காக கைமாறு என்னிடம் ஏதுமில்லை. (கடைகாறும் கையடையாய்) - இறுதிவரை அடைக்கலமாய் (சும்மா ரட்சணை செய்) = இலவசமாக மீட்பு வேண்டுகிறேன் (சொல் சுதந்திரம்) = அறிவோ செல்வமோ ஏதும என்னிடமில்லை. (அம்மான்) = அழகிய கடவுளே.

**சரணம் 3 :** (திரைசேர்வெம்பவமாம்) – நுரையுடன் அலைபாயும் கொடிய பாவக்கடலில் தீவினை செய்ததால் மூழ்கிய பாவி என்னைக் (கரைசேர்த்து) – பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை நான் அடையாதபடி கரைசேர்த்து (உய்க்க) – வாழ்விக்க, (புனையாயினை) – தெப்பமானீர், தெப்பகுளம், தெப்பதிருவிழா என இந்து ஆலயங்களில் உண்டு. தெப்பக்குளத்தின் நடுவே ஓர் மண்டபம் இருக்கும். ஆலயத்திலிருந்து சிலைகளை அலங்கரித்து அக்காலத்து கட்டுமரமாகிய மிதக்ககூடிய தெப்பத்தில் வைத்து இசையுடனும் பாடலுடனும் குருக்கள் எடுத்துச் சென்று நடு மண்டபத்தில் வைப்பது தெப்பத்திருவிழாவாகும்.

இச்சரணத்தின் சிறப்பேதெனில், தெப்பத்தில் சிலைகளும் குருக்களும் ஏறியவுடன் அந்தத் தெப்பத்தின் மரக்கட்டைகள் தண்ணீருக்குள் மேலும் சற்று அமிழ்ந்து நனையும், இதைத்தான், தெப்பத்தின் கட்டைகள் நனைவதைபோல் மழையில் தொப்பக்கட்டையாய் நனைத்திருக்கிறாயே, என்பது பேச்சு மொழியாயிற்று. இதிலுள்ள இறையியல் யாதெனில், தெப்பம் தண்ணீரில் நனைந்தாற்போல் பாவியைக் காப்பாற்றிக் கரைசேர்ப்பதற்காக (புனை) தெப்பமாகச் செயல்பட்ட (மனிதாகப் பிறந்த தேவகுமாரன்) பாவக்கடலில் நனைத்தார். பாவிகளில் ஒருவராக எண்ணப்பட்டார். (லூக்கா 22 : 37) சிலுவையில் கள்ளர் நடுவில் அறையப்பட்டார் எனத் திருமறை சுட்டுவதை ஆசிரியர் மறைமுகமாக விளக்குகின்றனர். (கண்ணிலியான்) பாவக்கடலில் மூழ்கும் எனக்குக் கண்தெரியவில்லை. (பரசேன்) - மோட்சத்தை

உடையவனே, (பற்றுகிலேன்) குட்டிகுரங்கு தாய் குரங்கைப் பிடித்தாற்போல் நான் உம்மைப் பற்றிப் பிடிக்க சக்தி இல்லை (பற்றியபற்றுவிடாய்) நீர் என்னைப் பிடித்திருக்கிறீர் அந்தப் பிடியை (பூனை தன் குட்டியை வாயால் கவ்விச் செல்வது போல்) நீர் விடமாட்டீர்.

**சரணம் 4 :** (என்னை) என் பக்தி வாழ்க்கையை மதியாது (ஏயே என்றிகழும்) பரிகாசம் செய்யும் இவ்வுலகில் என் பெற்றோரும், உடன் பிறப்பும், என் ஆலோசர்களும், செல்வமும், நண்பர்களும் நீயே என்று திருப்தியடைகிறார்.

**சரணம் 5 :** (துப்பார்) தூய சிந்தனை எனக்கில்லை (மறைந்தீட்டிய) மறைவாய் செய்த பாவங்களை (தப்பாதே வெளியாய்) – தவறாது வெளியாகும் (நடு நாளெனைத் தாங்கிக் கொள்ள) நியாயத் தீர்ப்பு நாளில் என்னைக் காப்பாற்ற என் பாவங்களை மூடிட, நீக்கிட, மனித குமாரனாகக் (கோலமெடுத்த) உருவெடுத்த (அப்பா – பரம தந்தையே உம்மையன்றி யார் எனக்குத் துணை? யார் உறவுக்காரர்கள் எனப்பாடுகின்றார்.

குறிப்பு : அனைத்துச் சரணங்களிலும் எதுகைத் தொடையும் ஈற்றடியனைத்தும், ஒன்றியும் அமைத்து, தேவார நடையில் பாடியுள்ளார்.

கிறிஸ்தவ இலக்கிய சங்கம் வெளியீடு
**Rev. Lazaras Selvanathan**
எழுதிய கீர்த்தனை புதையல் பகுதி 1-ல் இருந்து எடுக்கப்பட்டது.